சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் - வார பாடசாலை

வாரம் - 3

பாடம் - பொது தகவல் தொழிநுட்பவியல்

தரம் - 12

தயாரிப்பு - செல்வி. M. யஷோ கீரத்தனா
இ/இரத்தினபுரி தமிழ் ம. வி.

**தேர்ச்சி 1.0 - காலத்துக்குரிய பயன்களை பெற்றுக் கொள்வதற்காக கணணியையும் அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் கண்டறிவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 -தனிநபர் கணனியின் விபரக்குறிப்புக்களை அடையாளங் காண்பார்.**

**<u>தரவு</u>**

தரவானது கணனியால் அல்லது மனிதனால் செயற்பாடுகளுக்கு உட்படுத்தக்கூடிய அளவுகள், எழுத்துருக்கள் மற்றும் குறியீடுகள் என்பனவையாகும். இவை சேமிக்கப்பட்டு பின் சமிக்ஞைகளாக பரிமாற்றப்படக்கூடிய காந்த, ஒளியியல் அல்லது பொறிமுறை பதிவு ஊடகங்களில் பதிவு செய்யக்கூடிய மூல விடயங்களின் பிரதிநிதித்துவமாகும்.

**<u>தகவல்</u>**

பயனருக்குஅவசியமான வகையில் அரத்தமுள்ளவாறு, ஒழுங்கமைக்கப்பட்ட/ வகைப்படுத்தப்பட்டதும் தீர்மானங்கள் மற்றும் திட்டமிடல் என்பவற்றை மேற்கொள்வதற்கு முறைவழியாக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட தரவுகள் தகவல்களாகும்.

**<u>தகவலின் பண்புகள்</u>**

1. பொருத்தம்
2. செம்மைத்தன்மை
3. முழுமை
4. காலம்
5. நம்பகத்தன்மை
6. அணுகக்கூடிய தன்மை

**<u>கணனிக்கான விவரக்குறிப்பு</u>**

கணனியொன்றை கொள்வனவு செய்வதற்கு தேவையான முக்கிய கூறுகளின் பட்டியல் விவரக்குறிப்பு எனப்படும். எவ்வாறான கணனியை கொள்வனவு செய்தல் வேண்டும் என்பதையும் எவ்வாறான இயல்புகளை கொண்டிருக்க வேண்டும் என்பதனையும் தீர்மானிக்க விற்பனையாளர்களினால் கொள்வனவாளருக்கு வழங்கப்படும் விபரமாகும்.

**பயிற்சி**

1. கணனி விவரக்குறிப்பு மதிப்பாய்வொன்றை மேற்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய அங்கங்கள் யாவை?
2. கணனியொன்றை கொள்வனவு செய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய மூன்று விடயங்களைத் தருக.